பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

## Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆனி 04 | திங்கட்கிழமை | 19.06.2023 | கதிர் 220

## இனி இது ரகசியம் அல்ல!

நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன் நாலாறுமாதமாய்க்குயவனைவேண்டி கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக் கூத்தாடிக்கூத்தாடிப்போட்டுடைத்தாண்டி என்பது கடுவெளிச் சித்தருடைய பாடல். இன்றைக்குரெலோவின்நிலைஜனநாயகக் கூட்டணிக்குள் இப்படித்தானாகிவிட்டது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டமைப்பை விட்டுவிட்டு தனித் தனியே தேர்தலை எதிர்கொள்வோம் என்று தமிழ் அரசுக் கட்சிக்குள் சுமந்திரன் தரப்பினர் பேச்செடுத்தபோதே, ஆப்புத் தயாராகி விட்டது என்பதை ஊகித்து அதற்கேற்ப தன்னை மட்டுமல்லாது புளொட்டையும் தயார்ப்படுத்திக்கொண்டுதமிழ்அரசைவிட்டு வெளியேவந்து, நாங்கள்தான் கூட்டமைப்பு என்றுஉரிமைகோரிக்கொண்டுஇன்றைய ஜனநாயகக் கூட்டணிக்குப் பிள்ளையார் சுழி போட்டது என்னவோ ரெலோதான். அதையாரும் மறுக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழ் அரசுக் கட்சிக்கு நிகராக தொடக்கம் முதல் இருந்த மற்றொரு கட்சி என்றால் அது தாம்தான் என்ற ஒற்றைத் தகுதியை வைத்துக் கொண்டு ஜனநாயகக் ☞ 2

## உள்நாட்டு கடன்சீரமைப்பு பற்றி இன்னமும் முடிவேதுமில்லை

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை முன்னெடுக்கும் செயன்முறை குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையென பதில்நிதிஅமைச்சர்ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய கடன் மறுசீரமைப்பினை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளதோடு அரசாங்கம் அதன் தீர்மானத்தை மாற்றுவதற்கான காரணத்தை விளக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

அவரது கருத்துக்குவிளக்கமளிக்கும் வகையிலேயே பதில் நிதி அமைச்சர் தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

அவர் வெளி ☞ 2

## இன, மத மோதல்களை உருவாக்கி அதிகாரத்தைத் தக்கவைக்க முயற்சி

### ஆட்சியாளர்களைக் கடுமையாகச் சாடுகிறார் அனுரகுமார திஸநாயக்க

இன, மத மோதல்களை உருவாக்கி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன எனத் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியுடன் தொடர்புடைய ஓய்வுபெற்ற முப்படையினர் ஒன்றியத்தினுடைய அநுராதபுர மாவட்ட மாநாடு நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டை சீரழித்தனர். எரிவாயுவை இல்லாதொழித்தனர். எரிபொருளை ஒழித்தனர். கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. வயல் நிலங்கள் பாழடைந்தன. இதனால் ஏற்பட்ட விளைவால் சிங்கள, தமிழ் மக்கள் எவ்விதமான பேதங்களுமின்றி ஒன்றிணைந்தார்கள்.

அடிமட்ட மக்கள் வீதிக்கு வந்தார்கள். இந்த நிலைமையை அதிகாரத்தில் இருந்தவர்கள் ஒருபோதும்நினைத்துப்பார்த்திருக்கவில்லை. ☞ 2

# அரச - தமிழ்க் கட்சிகள் பேச்சில் ஒரே குரலில் முன்னகர முயற்சி

## தமிழ் அரசு, விக்னேஸ்வரனுடனும் சேர்ந்துபோக ஜனநாயக கூட்டணி முடிவு

ஆட்சியாளர்களுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் எதிர்காலத்தில்இடம்பெறக்கூடிய சந்திப்புக்களில் ஒரே குரலில் பேசுவதற்கான முயற்சியை தமிழ்அரசுக்கட்சியின்பெருந்தலைவர்இரா.சம்பந்தன் மற்றும்தமிழ்மக்கள்கூட்டணித் தலைவர் விக்னேஸ்வரன் ஆகியோருடன் சேர்ந்து முன்னெடுப்பதுஎன்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

வவுனியாவில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த ஜனநாயகக்கூட்டணியின் இணைத்தலைவரும் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தமது தரப்பின் இந்தமுடிவை அறிவித்தார்.வவுனியா வில் நேற்று இடம்பெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின் தலைவர்கள் செய்தியாளர்களிடம் பேசினர். அப்போது தெரிவிக்கப்பட்டதாவது:

ஆட்சியாளர்களுடன்எதிர்காலத்தில்பேசுகின்றபோது ஒரே குரலில் பேசவேண்டும் என்ற கோரிக்கைக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். ஒரே குரலில் பேசுவதற்காக தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணித் தலைவரர் விக்கினேஸ்வரன் ஆகியோருடனும் பேசி அவர்களோடும் இணைந்து போவதற்கான முயற்சிகளை நாங்கள் எடுப்போம்.

ஜனநாயகதமிழ்தேசியக்கூட்டனியின்உயர்மட்டக் குழுவான நிறைவேற்றுக் குழு கூடி பல முக்கிய தீர்மானங்களைஎடுத்துள்ளது.இந்தக்கட்சிக்கானயாப்பு தயாரிக்கப்பட்டு இன்று இறுதி வடிவம் பெற்றுள்ளது. ஜனநாயகதமிழ்தேசியக்கூட்டனியில்உள்ள5கட்சிகளும் யாப்பைஏற்றுக் கொண்டுள்ளன. இந்த யாப்பு அடுத்து சில தினங்களில் தேர்தல் ஆணையாளருக்கு ☞ 2

## அமெ. பொருளாதார நிபுணருடன் கிழக்கு ஆளுநர் நேற்றுச் சந்திப்பு



(அகீல்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதரக பொருளாதார நிபுணருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கானஅமெரிக்க தூதரக பொருளாதார நிபுணர்ஜோய்வினிமச்சாடோ (JoeviniMachado) மரியாதை நிமிர்த்தம்கிழக்கு ஆளுநரைச் சந்தித்துகிழக்கின்பொருளாதார நடவடிக்கைகள், அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துக் கேட்டறிந்துகொண்டார்.

இந்த சந்திப்பின் போது தூதரகநிபுணர்ஆளுநருக்குத் தனது வாழ்த்துக்களைத்

தெரிவித்ததுடன் கிழக்கின் அரசியல், நிர்வாக விட யங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

## சிங்கப்பூரின் ஊடாகச் சட்டமே இலங்கைக்கும் மிகஅவசியம்

### வஜிர அபேவர்த்தன எம்.பி. கருத்து



சிங்கப்பூரில் உள்ள வாறான ஊடகச் சட்டமே இலங்கைக்குஅவசியமாகும்என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

பலப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஊடகங்கள் தொடர்பில் நான் தெரிவித்த கருத்துக்கள் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டுள்ளதைப் பார்த்தேன். இலங்கைக்கு ஊடக சட்டம் அவசியமாகும்.

ஜே.ஆர்.ஜெவர்த்தனவே ஊடகங்களை இலங்கைக்கு அறிமுகப்படுத்தினார். அவரது முயற்சியால் தான் ஜப்பான் பரிசாக ரூபவாஹினியை வழங்கியது.

அத்திட்டத்தினை ☞ 2

## உள்ளாட்சித் தேர்தலை நடத்த மீண்டும் பணம் கேட்க முடிவு

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பணத்தை விடுவிக்கும்படி திறைசேரி செயலாளரிடம் அடுத்த வாரம் மற்றுமொரு கோரிக்கையைத் தாம் விடுக்க உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலை குறிப்பிட்ட உயர்வை அடைந்திருப்பதாக ஆட்சியாளர்களே அறிக்கைகளை வெளியிடுவதால் இந்தக் கோரிக்கைத் தான் விடுக்க இருக்கின்றார் என்று அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு பணம் கோரி தேர்தல்கள் ஆணைக்குழு ஆட்சியாளர்களிடம் பல கோரிக்கைகளை முன்வைத் திருந்தது. ஆனால் நாட்டில் தற்போது நிலவும் நிதி நெருக்கடி காரணமாக பணத்தை விடுவிப்பதற்கான அனுமதி ஜனாதிபதியாகிய ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கிடைக்கவில்லை என்று என திறைசேரி செயலாளர் ஆணைக்குழுவிற்குஅறிவித் திருந்தார். ☞ 2

## இந்த ஆட்சியை வீழ்த்தும் 2ஆவது சதி தொடங்கியது

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



இந்த ஆட்சியை வீழ்த்தும் இரண்டாவது சூழ்ச்சி தொடங்கியுள்ளதாக பொது ஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்தார்.

வலப்பனை பகுதியில் நேற்று நடைபெற்ற பொது மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளும் மூடப்படுகின்றன. தொழில் வாய்ப்புகளைப் பலர் இழக்கின்றனர். உற்பத்திதுறையும் வீழ்ச்சியடைந்துள்ளது. வரி அதிகரித்துள்ளது. வங்கிகளின் வட்டிவீதம் அதிகரித்துள்ளது.

ஏற்றுமதிக்கும் வரி அதிகரித்தமையால் கொள் முதல் கட்டளைகள் எமது நாட்டுக்கு தொழிற்சாலைகள் வருவதில்லை. சில ☞ 2

## பாண் விலையை ரூ. 10ஆல் குறைக்க அமைச்சர் முடிவு

பாண்உள்ளிட்டஏனைய வெதுப்பகப் பொருட்களின் விலையை 10 ரூபாவினால் குறைக்கதீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோதெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில்அவர்இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையை உடனடியாக 10 ரூபாவினால் குறைக்குமாறு உரிய திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளேன். ☞ 2

## இந்தியாவின் புதிய நீர்மூழ்கி இன்று கொழும்பு வருகிறது

இந்திய கடற்படைக்கு சொந்தமான புத்தம் புதிய நீர்மூழ்கி கப்பலான வாகீர் இன்று இலங்கைக்கு வருகைத் தரவுள்ளதாக இந்திய உயர்ஆணையரகம் தெரிவித்துள்ளது.

ஒன்பதாவது சர்வதேச யோகாதினத்தைகொண்டாடும் வகையில், செயல்பாட்டுப் பயணமாககுறித்தநீழ்மூழ்கிக் கப்பல் வருகை தரவுள்ளதாக இந்திய உயர்ஆணையரகம் தெரிவித்துள்ளது.

'வாகீர்' என்று பெயரிடப் பட்டுள்ள இந்த நீர்மூழ்கிக் கப்பல்நாளை முதல்ஜீன் 22 வரை இலங்கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய நீர்மூழ்கிக் கப்பற்படையின் தளபதி மற்றும் இலங்கையின் மேற்கு கடற்படைக் கட்டளைப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்றும் இதன்போது திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு கண்காட்சிக்காக இந்திய நீர்மூழ்கிக் கப்பலைத் திறக்கும் திட்டமும் இருப்பதாக இந்திய உயர்ஆணையரகம் மேலும் தெரிவித்துள்ளது.

## வெதுப்ப உரிமையாளர் சங்கத்தின் தலைவருக்கு எதிராக முறைப்பாடு

அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தனவுக்கு எதிராக சமூக செயற்பாட்டாளர்டான்பிரியசாத் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மறுத்து வருவதாக அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர்ஊடகங்களுக்குதெரிவித்ததாவது,

கோதுமைமாவின்விலை அதிகரித்தபோது வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கூட்டணிக்குத் தலைமை தாங்கிவிடுவது என்பதிலும் ரெலோ திண்ணமாக இருந்து காய் நகர்த்தியதும் என்னவோ உண்மைதான். ஈபிஆர்எல்எவ்,ஒருகாலத்தில் தமது கட்சிக்குள்ளேயே எதிர்ப்பாளராக இருந்த சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பவற்றையெல்லாம் திரட்டிக்கொண்டு,முன்னைய 3 கட்சிக் கூட்டமைப்பைவிட இப்போது இன்னும் பலமாக 5 கட்சிக் கூட்டணியாக வந்து நிற்கின்றோம் என்று மக்களுக்கு மயாயால வித்தை காட்ட முற்பட்டுக் கஸ்டப்பட்டதிலும் ரெலோவுக்கு கணிசமான பங்கு இருக்கிறது.

இவையெல்லாம் எதற்கென்றால், அந்தத் தலைமைப் பதவியை எப்படியும் பிடித்துவிடலாம்,கூட்டமைப்பு என்ற பெயரில் அதற்குள் இருக்கும்பழையகட்சிதான் ஒன்றே என்பதை முன்னிலைப்படுத்தி தலைமையை வசப்படுத்தலாம் என்ற கனவோடும் காய்நகர்த்தி வந்ததுஅந்தக்கட்சி. ஆனால், எல்லாவற்றையும்இடையில் வந்த என்னப்பன் ரணில் விக்கிரமசிங்க கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டுப் போய்விட்டார்.

கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் இருந்த தமிழ் அரசுக் கட்சியைக் குட்டி வைத்து தமது போக்குக்கு ஆடவைப்பதில் குறியாக இருந்த இந்தியா, தொடக்கத்தில் ரெலோவின் நகர்வுகளுக்கு பச்சைக் கொடிகாட்டி ஊக்குவித்தது என்னவோஉண்மைதான். ஆனால், ரணிலின் மாய்மாலத்தில்ரெலோசீனித்தொழிற்சாலைக் கனவுக்குள் விழுந்த கணம் முதல் அவர்களுக்கும் ஆப்படிக்க அது பின்னிற்கவில்லை. கடைசியில் சீனித் தொழிற்சாலைக் கனவால் கூட்டணிக்குள் தலைமைப் பதவி கிட்டாமலேயே போய்விட்டது.

இப்போது ஜனநாயகக் கூட்டணிக்குள் கூட்டுத் தலைமையில் ஒருவராக அடங்கி ஒடுங்க வேண்டியதாகப்போய்விட்டது. போதாதற்கு கூட்டணியின் உருவாக்கத்தில் முன்னின்று உழைத்த சுரேன் குருசாமிக்கும் முக்கிய பொறுப்புக்கள் எதுவும் இல்லை என்ற நிலையாகிவிட்டது. பொருளாளர் பதவியை அவருக்கு வழங்க முன்வந்தபோதும் நிதியே இல்லாத கூட்டணிக்கு பொருளாளராகி என்ன பயன் என்றோ என்னவோ அவர் அதனை நிராகரித்துவிட்டார்.

நேற்றைய கூட்டத்தில் சுழற்சி முறையிலான தனித் தலைமையா, கூட்டுத் தலைமையா என்பதுதான் நீண்ட நேரத்திற்கு விவாதிக்கப்பட்டிருக்கின்றது. எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே சுழற்சிமுறைத் தனித் தலைமையில் முதலாவதாகப் பதவியைப் பிடிக்க ரெலோ போராடியிருக்கிறது. அப்படியே தனித் தலைமையை உருவாக்குவது என்றால் அமைப்புக்குள் மூத்தவரான புளொட் தலைவர் சித்தார்த்தனுக்கே முதலில் அதனை வழங்கலாம் என்ற குண்டைத் தூக்கிப் போட்டு ரெலோவின் முயற்சிக்கு ஆப்படித்திருக்கிறார்கள்.

மற்றொரு பக்கத்தில் சிறிகாந்தாவோ தனித் தலைமை என்றால் பிறகு சம்பந்தர், சுமந்திரன் போன்றுதான் எதிர்காலம் இருக்கும், அதனால் கூட்டுத் தலைமைதான் என்று விடாப்பிடியாக நின்றிருக்கிறார். கட்சியின் செயலாளர் பதவியிலும் ஏற்கனவேஅந்தக்கட்சியைச் சேர்ந்த ஆர்.ஆர்தான் தேர்தல்கள் திணைக்களத்தில் பதியப்பட்டிருக்கின்றார் என்பதால் சித்தார்த்தனைத் தலைவராக்கும்போது இரு பதவிகளும் ஒரே கட்சிக்கே போய்விடும் என்பதைக் காரணமாகக் காட்டி அந்த யோசனையையும் அவர் நிராகரித்துவிட்டார்.

இந்த அக்கப் போர்களுக்கு மத்தியில் ஜனநாயகப் போராளிகள் கட்சி என்னத்தைச் சொல்வது என்று அப்படியே அமர்ந்திருக்க, காலையில் தொடங்கிய கூட்டம் ஒருவழியாக பிற்பகலில் கூட்டுத் தலைமை என்கிற இணக்கத்திற்கு வந்து முடிந்திருக்கிறது. அதாவது இந்தக் கூட்டணி சார்பில் எடுக்கப்படும் எந்தவொரு முடிவையும் இதிலுள்ள 5 கட்சிகளினதும் தலைவர்களான, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், ந.சிறீகாந்தா, வேந்தன் ஆகியோர் இணைந்தே கூட்டணியின் முடிவுகளை எடுப்பார்கள். கூட்டணியைக் கட்டி வளர்த்து விருட்சமாக்கும் பணி ரெலோவின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரான ஜனாவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ரெலோவிற்குள் செல்வத்தாருக்கு எதிரணியைச் சேர்ந்தவர் ஜனா. எதிர்காலத்தில் செல்வத்தாரின் தலைமையை அசைத்துப்பார்க்கக்கூடிய ஆள் என்று கட்சிக்குள் கணிக்கப்படுபவர். இப்போது அவர் கூட்டணியை வளர்க்கவேண்டி பொறுப்புக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இந்தக்கூட்டுத்தலைமையின் முதலாவது அறிவிப்பே, தமிழர் பிரச்சினைக்கு ஒரே குரலில் தீர்வைப் பேசுவது என்பதாக சாதகமாகவே அமைந்திருக்கின்றது. அதாவது தமிழ் அரசுக் கட்சி, முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் ஆகியோருடன் இணைந்து தீர்வுப் பாதையில்ஒன்றாகப்பயணிப்பதே கூட்டணியின் கூட்டுத் தலைமையின் முடிவு. அது நல்லதுதான் தேர்தலுக்காகப் போலி ஒற்றுமையைக் காட்டிக்கொண்டிருக்காமல் மக்களைத் தனித்தனியே சந்தித்துக்கொண்டு, ஒரே தீர்வை நோக்கிச் செல்வது என்பது ஒப்பீட்டு ரீதியில் சிறப்பானதுதான். எல்லாப் வீதிகளும் ரோம் நோக்கியே போகின்றனஎன்பதைப்போல யார் குற்றி அரிசியானாலும் தமிழர்களுக்கான தீர்வு ஒன்றானால் சரிதான்.

**இடிமின்னல்**

(கருத்து மற்றும் தகவல்களுக்கு idiminnal23@gmail.com)

## அரச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைக்கப்படும்.

அதேபோல் ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டனியின் பதவிநிலைகளுக்கும்நபர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இணைத் தலைவர்களைக் கொண்ட கட்சியாக இது தொடர்ந்து செயற்படும். தற்போது 5 கட்சிகள் இதில் உள்ளன. அவற்றின் தலைவர்கள் 5 பேரும் இணைத் தலைவர்களாக செயற்படுவர். அதேபோல் கட்சியின் செயலாளராக ஏற்கனவே ஜனநாயக தமிழ்தேசியக் கூட்டனியின் செயலாளராகஇருந்தபுளொட் அமைப்பைச் சேர்ந்த ஆர் ராகவன் (ஆர்.ஆர்) தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் தொர்ந்தும் அந்த பதவியை வகிப்பார். ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டனியைவடக்கு - கிழக்கு பகுதி எங்கும் விரிவாக்குவது

எனத் தீர்மானித்துள்ளோம். அதனுடைய தேசிய அமைப்பாளராக கிழக்கு மாகாணநாடாளுமன்ற உறுப்பினராக இருக் கின்ற ஜனா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கூட்டணியைப் பலப்படுத்த சகல நடவடிக்கைகளையும் அவர் எடுப்பார் என்பது டன், மாவட்டங்கள், தொகுதிகளுக்கான அமைப்பாளர்களைத் தெரிவு செய்து உயர்மட்ட குழுவுடன் பேசி இறுதிசெய்வார்எனநம்புகின்றோம்.

கூட்டணியின் பொருளாளராகஜனநாயகபோராளிகள் கட்சியைச சேர்ந்த துளசி தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருடன் இணைந்து நிதிக் குழு ஒன்றையும் நிறுவுவது எனமுடிவுஎடுக்கப்பட்டுள்ளது. கூட்டணியின் பேச்சாளராக சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாற்றப்படும்வரை அவர் அந்தப் பதவியில் இருப்பார்.

இந்தக் கூட்டணியை ஒரு யாப்பு வடிவத்துடனும், அமைப்பு விதிகளுடனும், நிர்வாக ஒழுங்குகளுடனும், முன்னெடுத்துச் செல்வதற்கான முழு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். இதுவரை எங்களை நோக்கி முன்வைக்கப்பட்ட பல்வேறுபட்ட விமர்சனங்கள் இருக்கின்றன.. இன்னும் நிர்வாகம் தெரிவு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது. ஆனால்இன்றுநாம் அதற்கான முழுவடிவத்தைக் கொடுத்திருக்கின்றோம்.

தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெற்றெடுக்கும் செயற்பாட்டை மிக இறுக்கமாகஎதிர்காலத்தில் கூட்டணியில் உள்ள அனைவரும் இணைந்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். தற்போதைய அரசியல்நிலமைதொடர்பிலும் கலந்துரை யாடியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டில்லிக்கு போவது பற்றியும், தமிழர் தரப்பில் இது தொடர்பாக முன்னெடுக்கவேண்டியவை என்ன எனவும் கதைத்துள்ளோம்.

இதுதொடர்பில்விரைவில் இந்தியாவிற்குக்கடிதங்களை அனுப்பவுள்ளோம். எதிர்காலத்தில் தமிழ் மக்களது பிரச்சினைக்கான தீர்வு மற்றும் நடக்க கூடிய விடயங்கள் தொடர்பிலும் முக்கியத்துவம் கொடுத்து பேசினோம்.

அரசியல் தீர்வுக்கு ஒரே குரலில்பேசுவதுதான்முக்கிய தேவையாகவுள்ளது.ணு தனித்தரப்பாகப்பேசும்போது ஒருமித்த கோரிக்கையை அது பலவீனப்படுத்துவதாக அமையும். கடந்த காலத்தில் நாங்கள் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் தமிழசுக் கட்சி நிராகரித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யாது, யாப்பைஉருவாக்காது இருந்தது. இன்று அனைத்தையும்முறியடித்துதேவையான அனைத்து பொறிமுறைகளையும் நிறைவேற்றியுள்ளோம். அடுத்து வரும் காலங்களில் ஒவ்வொரு பிரச்சினைக்குமான குழுக்களை நிறுவி அதற்கான செயலாளர்களை நியமித்து கூட்டணியை வளர்த்துச் செல்வோம்.

இந்தக் கூட்டம் வரலாற்றில் முக்கிய கூட்டம். முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்ட நாள். எதிர்காலத்தில் எமது யாப்பு கொள்கைளைஏற்றுநடக்கும் கட்சிகள் அனைத்தும் எம்மோடுஇணையமுடியும். அவர்கள் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் - எனத் தெரிவிக்கப்பட்டது. (100)

## உள்நாட்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டுள்ள சமூக ஊடகப் பதிவிலேயேமேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கமைய, கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வது தொடர்பான சர்வதேச மட்டத்திலான பேச்சை இந்த ஆட்சி முன்னெடுத்து வருகிறது.

உள்நாட்டு கடன்மறுசீரமைப்பினை முன்னெடுப்பதற்கான செயன்முறை இன்னும் இறுதி செய்யப்படவில்லை. வங்கி மற்றும் நிதித்துறையின் ஸ்திரத் தன்மையைஉறுதிசெய்வதில் அரசு முழு அர்ப்பணிப்புடன் உள்ளது. எதிர்வுகூறல்கள், முன்கூட்டிய ஊகங்கள் சந்தைத்துறையில் நம்பிக்கையை குறைமதிப்புக்கு உட்படுத்தலாம்.

எனவே, இந்த விடயத்தில் நாம் பொறுப்புடனும்விடாமுயற்சியுடனும் கருத்துக்களைவெளியிடுவது முக்கியமாகும். கடன் மறுசீரமைப்பு முயற்சிகளில் இருதரப்பு கடன் வழங்குநர்களுடனானபேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதில் நாங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

இவை நிதி ஸ்திரத் தன்மையை அடைவதற்கு சாதகமானஉடன்படிக்கைக்கு வழிவகுக்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான நிலையில் தற்போது, ஆட்சியில் உள்ளவர்கள் மீண்டும் இனவாதத்தினையும், மதவாதத்தினையும் தோற்றுவிப்பதற்கு முனைகின்றாஜுகள்.

தற்போது இன, மதவாதத்தினைகிளப்புவதற்காகபழைய ஊடகத்தினை பயன்படுத்தி பெரகராவுக்கு முன்னால் செல்லும் சாட்டையடிகாரர்களைப்போன்று செயற்படுவதற்கு நிகழ்ச்சிநிரலிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது இனமுறுகலை தூண்டுவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. இரண்டு தரப்புக்களாக வரிந்து நின்று போராடும்நிலைமைதோற்றுவிக்கப்பட்டது. ஆனால்குறித்த இரண்டு தரப்பிற்கும் ஒரே வங்கிக் கணக்கிலிருந்து நிதி சென்றமை இரண்டு வருடங்களின் பின்னர்தான் கண்டறியப்பட்டுள்ளது.

சிங்கள மக்களையும், முஸ்லிம்களையும்உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது மோதவிட்டு வேடிக்கை பார்க்கப்பட்டது.

தற்போதுஅதிகாரத்தினை தக்கவைத்துக்கொள்வதற்காக மீண்டும்அதேநிலைமைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. தற்போது அதற்கான வடிவங்கள் மாறினாலும், நோக்கம் ஒன்றாகவே உள்ளது. ஆகவே அந்த விடயங்களுக்குபொதுமக்கள் இடமளிக்கவே கூடாது - என்றார்.

## சிங்கப்பூரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீதுருதாலகால மலையிலிருந்து டொரிண்டனுக்கு கொண்டு சென்றபோது மக்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர். அப்போது ஜே.ஆரை திட்டித் தீர்த்தனர்.

அவரை அவ்வாறு திட்டியவர்களே தற்போது ஊடகங்களின் உரிமையாளர்களாக உள்ளனர். அந்த ஊடக உரிமையாளர்களின் பிள்ளைகளே மீண்டும் தூற்றுகின்றார்கள்.

நாடு என்ற வகையில் நாட்டுக்கு சட்டம் தேவை. ஊடகம் தேவை. ஆனால் அந்த ஊடகம் ஒழுக்கமானதாக இருக்கவேண்டும். சிங்கப்பூரில்காணப்படுகின்ற ஊடகச்சட்டம்இங்குஅமுலாக்கப்படவேண்டும். அப்போது தான் பொறுப்புள்ள நல்லதொரு ஊடகம் உருவாகும் - என்றார்.

## உள்ளாட்சித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி இன்மை காரணமாக உள்ளாட்சித் தேர்தல் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான பெரும்பாலான தபால் மூல வாக்குகள் அச்சிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. அவை தற்போது அரசு அச்சகத்தின் பாதுகாப்பான வைப்புத்தொகையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மாகாணசபைத்தேர்தல்பிற்போடப்பட்ட போதிலும், அந்தத் தேர்தல் உட்பட எதிர்வரும் அனைத்துதேர்தல்களுக்கும் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக நிமல்ஜி.புஞ்சிஹேவாமேலும் தெரிவித்தார்.

## பாண் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த அறிவிப்புக்கு அமைவாக விலைகளைக் குறைக்காதவர்கள் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தயங்கப் போவதில்லை.

உள்ளுர் கோதுமை மா நிறுவனங்கள் இனிமேல் கோதுமை மா விலையை அதிகரிப்பதாயின் அதற்கு நுகர்வோர் அதிகார சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். எனவே வெதுப்பக உற்பத்திகளின் விலைகளைக் குறைக்க முடியும் - என்றார்.

இதேவேளை, மாவிலை குறைந்தாலும் வெதுப்பகத்துக்குத்தேவையானஏனைய பொருட்களின் விலைகள் குறைக்கப்படாமையால்தமது உற்பத்திப் பொருட்களின் விலைகளைகுறைக்கமுடியாதுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று அவரும்செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோதுமைமாநிறுவனங்களிடமிருந்துபேக்கரிஉரிமையாளர்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைத்தால், எதிர்வரும்புதன்கிழமைக்குள் பாண் உள்ளிட்ட அனைத்து பேக்கரிபொருட்களின்விலைகளும் குறைக்கப்படும்.

முட்டை மற்றும் கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டால்பேக்கரிஉற்பத்திப் பொருட்களின் விலை குறைக்கப்படும்.அதற்கமைய, முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவாகவும் கோதுமை மாவின் விலை 180 முதல் 170 ரூபா வரை குறைக்க வேண்டும். தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள கோதுமை மா இறக்குமதியை மீண்டும் தொடங்க ஆட்சியாளர்கள் நடவடிக்கைஎடுக்கவேண்டும் - என்றார்.

## வெதுப்ப .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்த்திய உரிமையாளர் சங்கத் தலைவர் தற்போது கோதுமை மாவின் விலை குறைந்துள்ள நிலையில், மக்களுக்கு நிவாரணம் வழங்கமல் உள்ளார்.

முட்டைவிலைஉயர்ந்த போதும், பாண் உள்ளிட்ட பொருட்களின் விலையை அதிகரிக்கச் சொன்னார்கள். கடந்த காலங்களில் பொருட்களின் விலை குறைந்த போதும், கோதுமைமாவின் விலை குறைந்த போதும் அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர்என்.கே.ஜெயவர்தன எந்த தீர்வையும் வழங்கவில்லை.

அகில இலங்கைபேக்கரி உரிமையாளர்கள்சங்கத்தின் தலைவர் இந்த நாட்டின் நிறைவேற்றுத் தலைவர் அல்ல, அவர் விரும்பியவாறு கட்டுப்பாட்டு விலையை வைத்திருக்க முடியாது.

அந்தத் துறைசார்ந்த அமைச்சர் அமைதி காப்பது ஏன்? இப்படி வாடிக்கையாளர்களை கொள்ளையடிக்கும்ஜயவர்த்தனபோன்றவர்களுக்கு அமைச்சர் பயப்படுகிறாரா? இந்த விடயத்தில் எங்களுக்கு சந்தேகம் உள்ளது. இது தொடர்பாக விசாரணை நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளார்.

## இந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நெருக்கடிகள் எமது நாட்டில் காணப்படுகின்றன என்பதெல்லாம் சரி.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் எமது நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் மூடப்படும் நிலைக்கு செல்லுமாகவிருந்தால் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை வீழ்த்தும் சூழ்ச்சியின் இரண்டாவது அத்தியாயம் ஆரம்பித்துள்ளதாகஎன்னால்தெளிவாக கூறமுடியும்.

மக்களை கவனிக்குமாறு ஆட்சியாளர்களிடம் கூறுகிறோம். தொழில்கள் இல்லாமல் செய்ய வேண்டாம். பல துறைகளில் உற்பத்திப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. கிராமங்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்கு காரணம் கிராமத்தின் உற்பத்திப் பொருளாதாரம் எமது நாட்டில் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல்களை சாதகமாக்குவதே ஆட்சியாளர்களின் ஒரே எதிர்பார்ப்பாகவும், முயற்சியாகவும் இருக்கிறது. அந்தக் கலந்துரையாடல்கள் சாதகமாகும்போது எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வீழ்ச்சியடையுமாக இருந்தால், எமது கிராம மக்களின் சிறிய விவசாயம் வீழ்ச்சியடையுமாக இருந்தால், கிராமத்திலுள்ள அம்மா, அப்பாக்களின் பிள்ளைகளின் தொழில்கள் பறிக்கப்படுமாகவிருந்தால் மற்றுமொரு நெருக்கடியிலிருந்து வெளிவர பல ஆண்டுகளாகும் - என்றார்.


NEW SCIENCE HALL
Kannathiddy Road, Jaffna



2025 A/L
கணித, உயிரியல் பிரிவுகள்
நேரடி வகுப்புக்கள்
தமிழ் மொழி மூலம்

PHYSICS
திரு.G.பிரபா
திரு.N.கபிலன்
திரு.R.ராகுலன்

CHEMISTRY
திரு.G. Beno
திரு.T.சுசாந்தன்
திரு.V.K.நந்தா

BIOLOGY
திரு.V.S.குணசீலன்
திரு.K.இராகவன்

COM. MATHS
திரு.P.செந்தில்நாதன்
திரு.S.சிவகரன்

AGRICULTURE
திரு.K.அரசிளங்குமரன்

ICT
திரு.K.கேதீஸ்வரன்

English Medium

PHYSICS
MR.M.KUGANESWARAN
MR.R.RAAKULAN

CHEMISTRY
MR.G.BENO

BIOLOGY
MR.V.S.GUNASEELAN

COM. MATHS
MR.P.SENTHILNATHAN
MR.S.SIVAKARAN

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
நிகழ்நிலை வகுப்புக்களும் நடைபெறும்
சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்
076 569 3006, 076 566 3006, 0777 91 7611
New Science Hall Jaffna



விளம்பரத் தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்
076 443 80 22

# அம்பாறைக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கியமைக்கு தமிழர்கள் அநாதையாக்கப்படக்கூடாதென்பதே காரணம்

## அந்த மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் அக்கறை குறித்துப் பெருமிதப்பட்டார் கோடீஸ்வரன்

கடந்த காலத்தில் அம்பாறை மாவட்டம் அரசியல் ரீதியில் பின்தள்ளப்பட்டது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதனக்குக் கிடைத்த ஒரேயொரு ஆசனத்தை அம்பாறை மாவட்டத்துக்கு வழங்கியமைக்கான மூல காரணம் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்மக்கள் அநாதைகள் ஆக்கப்படக்கூடாது - அவர்களைக்கைவிடக்கூடாது-தமிழ்மக்கள் தமக்கான பிரதிநிதியில்லாமல் அவர்களின் பிரச்சினையைத்தீர்ப்பதற்குஏற்றதலைமை இல்லாமல் அநாதையாக்கப்படக்கூடாது என்பதற்காகவே.

இவ்வாறு அம்பாறை மாவட்ட மக்கள் தொடர்பில் கூட்டமைப்புக்குள்ள அக்கறை தொடர்பில் பெருமிதத்துடன் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மிகவும் பொருளாதார ரீதியாகப் பின்னடைவு கண்டுள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் ஊடக ஒலி - ஒளி பரப்பு சட்டமூலம் கொண்டு வரப்படவிருக்கின்றது. இந்த உத்தேச சட்டம் கொண்டுவரப்பட்டால் நாட்டிலுள்ள ஊடக குரல் நசுக்கப்படுகின்ற நிலை காணப்படும். உண்மையான விடயங்களை நாங்கள் வெளிக்கொண்டுவரமுடியாத சூழ்நிலை ஏற்படுத்தப்படும். இவ்வாறானவிடயங்களை அரசு மேற்கொள்ளும்போது கடுமையாகப் பாதிப்புறுபவர்கள் தமிழ் மக்களே வேறு யாருமல்லர்என்பதைநான் இந்த இடத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறான சட்டங்களை இயற்றுகின்றபோது ஊடக சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. அவ்வாறு மறுக்கப்பட்டால் மக்களின் வாழ்வதற்கான உரிமை நசுக்கப்படுகின்றது. இதனால் மக்களின் பிலச்சினைகளை வெளிக்கொண்டு வரமுடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகின்றது.

வடகொறியாவிலே எவ்வாறு மக்கள் நசுக்கப்படுகின்றார்களோ - அவர்களுக்கான வாழும் உரிமை எவ்வாறு மறுக்கப்பட்டோ - அவர்களின் கருத்துச் சுதந்திரம் எவ்வாறு இல்லாமலாக்கப்பட்டதோ அந்த நிலைமை இலங்கையிலும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

ஆகவே, இந்தச் சட்டமூலங்களை எதிர்க்கவேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு உண்டு. அது நிச்சயம் இவற்றை எதிர்க்கும். தமிழர்களோடும் - தமிழ் பண்புகளோடும் - தமிழுக்காகவும்தமிழ்த்தேசியத்துக்காகவும்



நாம் குரல்கொடுப்போம். - என்றார். (05)

# எல்லாவல மேதானந்த தேரரின் குழப்பியடிக்கும் செயற்பாடுகளை கண்டிக்கிறார் விக்னேஸ்வரன்!



எல்லாவல மேதானந்த தேரர், மேற்கொண்டுவரும் குழப்பியடிக்கும் செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதாக தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும், வரலாறு கசப்பானதாக இருந்தாலும் கி.பி. 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டுகளிலேயே சிங்கள மொழி இலங்கைக்கு வந்தது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றைமாற்றி, பின்னர்அதனடிப் படையில் தமிழர்களுக்குச் சொந்தமான பகுதிகளைக் கையகப்படுத்த முனைவது ஆக்கிரமிப்பு என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆகவே, இந்த விடயங்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்க்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (05)

# ஆன்மீக, உளவியல் கருத்தரங்கு

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை ஹுதா பள்ளிவாசல், தஃவா குழுவின் ஏற்பாட்டில் க.பொத.சாதரம்எழுதியமாணவ, மாணவிகளுக்கான ஆன்மீக, உளவியல் கருத்தரங்கு மௌலவி சாபித் (ஷரயி, ரியாதி) தலைமையில் சனிக்கிழமை பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில்மட்டுப்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து பயன்பெற்றனர். உளவியல் ரீதியாக அஷ்-ஷெய்க் அப்துல் ஹமீட்டால் (ஷரயி) மாணவர்களுக்கு பல ஆலோசனைகள் வழிகாட்டப்பட்டது. அத்துடன்கலாநிதி அஷ்-ஷெய்க்ரிஷாட் (ரியாதி) இளைஞர் யுவதிகளுக்கு தேவையான ஆன்மீக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

கருத்தரங்கின் இறுதி நிகழ்வாக கேள்விகள் கேட்கப்பட்டு சரியான விடையளித்த மாணவ, மாணவிகளுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உலமாக்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், தஃவா குழு உறுப்பினர்கள், பிறை அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம். நௌபீல் மற்றும் மாணவ, மாணவிகளும் கலந்துகொண்டனர்.

# முஸ்லிம் மீடியா போரத்தின் பொதுக்கூட்டம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 26 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் ஜூன் 25 காலை 9 மணி முதல் 310 டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள தபால் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ. இப்திகார் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில், இலங்கைக்கான மலேசியத் தூதுவரான பதி ஹிஷாம் ஆதம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதோடு, களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் பட்டதாரி நிறுவனத்தில் தொல்லியல் துறையில் மூத்த பேராசிரியராகக் கடமையாற்றும் தெல்ஹகவத்தகே ராஜ்குமார் சோமதேவவும் சிறப்பதிதியாகக் கலந்துகொண்டு, 'இலங்கையில் முஸ்லிம்கள் மீள் நோக்கிப் பார்த்தல்' எனும் தலைப்பில் விசேட உரையாற்றவுள்ளார்.

இரு அமர்வுகளாக நடைபெறும் இக் கூட்டத்தின் முதல் அமர்வில் ஊடகத்துறையில் பல வருடங்களாக சேவையாற்றியுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளதோடு, அண்மையில் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளரான கலைவாதி கலீல் பற்றிய இரங்கலுரைகளும் இடம்பெறும். இரண்டாவது அமர்வில் புதிய செயற்குழு தெரிவு செய்யும் நிகழ்வும் இடம்பெறும்.

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி நகலை தமிழ்க் கட்சிகளிடம் வழங்குவோம்

## இப்படிக் கூறுகிறார் விஜேதாஸ

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்த இறுதி நகல்வடிவை அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் வழங்கும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த நகல் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் சமர்ப்பித்த பின்னரே அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம் என விஜேதாஸ ராஜபக்ஷ கறிப்பிட்டுள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்த இறுதி நகல் அடுத்த மாத இறுதிக்குள் தயாராகிவிடும் எனவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றம்அனுமதியளித்ததும் டிசெம்பர் மாதம் முதல் அதற்காக ஆணைக்குழு செயற்பட ஆரம்பிக்கும் எனவும் நீதி அமைச்சர் விஜேதாஸ



ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 53 ஆவது அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த நடவடிக்கைகள்துரிதமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மக்களுக்கோ மக்கள் நலன்சார்ந்த திட்டங்களுக்கோ எதிராகச் செயற்படுபவர்கள் துரத்தியடிக்கப்படுவர்

## கோவிந்தன் கருணாகரம் ஆக்ரோஷம்

மக்களுக்கோ மக்கள் நலன்சார்ந்த திட்டங்களுக்கோ எதிராகச செயற்படும் எந்த அரசாங்கத்தினையும் தேர்தல் மூலமாக மாத்திரமல்ல வேறுவிதமாகவும்துரத்தியடிக்கும்நிலைஉருவாகும் எனமட்டக்களப்புமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், ஊடக அடக்குமுறையின் கீழ் 50 இற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட வரலாறு இந்த நாட்டுக்கு மட்டுமே உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களில் தங்களுக்கு எதிரான கருத்துகளை வெளிவராமல் தடுப்பதற்காக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகின்றது என்றும் தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்க முடியாது என்பதைநினைவில்கொண்டுஅரசாங்கம்செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

2019 ஆம் ஆண்டு 69 லட்சம் மக்கள் வாக்களித்து ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ, அதே மக்களால் இருப்பதற்கு இடமில்லாமல் துரத்தியடிக்கப்பட்டார் என்றும் அந்த நிலைமை இன்னுமொருவருக்குவராதுஎன்பதற்குஎந்தவொரு உத்தரவாதமும் இல்லை என்றும் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார். (05)



# பாலேந்திராவின் அரங்க நூல்கள் யாழ்ப்பாணத்தில் அறிமுகம்



க.பாலேந்திராவின் இரண்டு அரங்க நூல்களின் அறிமுகநிகழ்வுசனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில்இருநூல்களும் வெளியிட்டுவைக்கப்பட்டன..

பாலேந்திராவின் நேர்காணல்கள் மற்றும் பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள் ஆகிய இரு நூல்களும் அறிமுகம்செய்யப்பட்டுவெளியிட்டு வைக்கப்பட்டன.

நேர்காணல் நூலின் சிறப்பு பிரதியை நூலாசிரியர் பாலேந்திரா வெளியிட்டு வைக்கஈழத்தின் மூத்த இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணண் பெற்றுக் கொண்டார்.

அதேபோன்று பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள் எனும் நூலினை நூலாசிரியரான பாலேந்திரா வெளியிட்டு வைக்க மூத்த ஊடகவியலாளர் பாரதி பெற்றுக் கொண்டார்.

சோ.தேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பா.இரகுவரன், நா.நவராஜ், ஜோன்சன் ராஜ்குமார் உள்ளிட்டவர்கள் நூலின் அறிமுக உரையும் சிறப்புரையையும் ஆற்றினர்.

பாலேந்திராவும் அவரது பாரியாரான ஆணந்தராணி ஆகியோர்இணைந்துஅரங்க நினைவலைகள் எனும் நிகழ்வையும் ஆற்றினர். (3)

## சவூதி மன்னரின் அழைப்பில்...

# புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற இலங்கையிலிருந்து 10 பேர் தெரிவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சவூதி அரேபிய மன்னர் சல்மான் அப்துல் அஸீஸுடைய அழைப்பில் இம்முறை இலங்கையிலிருந்து 10 பேர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள்இன்றுதிங்கட்கிழமைபுனிதஹஜ்கடமையை நிறைவேற்ற மக்கா பயணமாகவுள்ளனர்.

ஒவ்வொருவருடமும்மன்னரின்விசேடஅழைப்பின்பேரில்சகலநாடுகளிலும்இருந்துஹஜ்யாத்திரைகளுக்காகசமூகத்தின்முக்கியபிரமுகர்கள்பலரும்தெரிவு செய்யப்படுவார்கள். அதன்படி இம்முறை 10 பேர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் பின்வருமாறு;

தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் அபூபக்கர் றமீஸ், ஊடகவியலாளர் முஹம்மட் அமீன் முஹம்மட் அஸ்ஸாம் உட்பட முஹம்மட் றிஸ்வான் அப்துல் றசாக் (ஒருங்கிணைப்பாளர்), ஜமால்டீன் முஹம்மட் நிஸாம், முஹம்மட் நஸீர் முஹம்மட் மபாஸ், முஹம்மட் மௌஜூத் முஹம்மட் முபீஸ், முஹம்மட் மூசின் முஹம்மட் சுபைன், அப்துல் ஸலாம் முஹம்மட், பக்கீர் மொஹிடீன் முஹம்மட் காஸிம், உமர்லெப்பை உஸனார் ரஹீம் ஆகியோரே தெரிவு செய்யப்பட்ட 10 சமூகத்தின் முக்கிய பிரமுகர்களாவர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ‘ஒரே குரல்” வரவேற்புக்குரியதே

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்கிற 5 கட்சிகளைக் கொண்ட கூட்டு நேற்று ஒரு அறிவிப்பை விடுத்திருக்கின்றது. இலங்கை ஆட்சியாளர்களுடன் எதிர்காலத்தில் நடத்தப்படக்கூடிய பேச்சுக்களில் ஒரே குரலில் பேசவேண்டும் என்று தீர்மானித்திருப்பதாக அந்தக் கூட்டணி அறிவித்திருக்கின்றது.

வவுனியாவில் நேற்று நடந்த ஜனநாயகக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின்பு அதன் பேச்சாளர் முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்சுரேஸ்பிரேமச்சந்திரன் இந்த அறிவிப்பை விடுத்தார். இது தமது கூட்டணித் தலைவர்களின் ஒருமித்த முடிவு என்றார்.

“இலங்கை ஆட்சியாளர்களுடன் எதிர்காலத்தில் பேசுகின்றபோதுஒரேகுரலில்பேசவேண்டும்என்றகோரிக்கைக்கு அமைய, ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டனியாகிய நாங்கள் அந்த விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரே குரலில் பேச தமிழரசுக் கட்சியினுடைய பெருந் தலைவர் சம்மந்தன் மற்றும் விக்கினேஸ்வரன் ஆகியோருடன் பேசி, அவர்களையும் இணைத்துக் கொண்டு போவதற்கான முயற்சிகளை எடுப்போம். அவர்கள் செய்யாவிட்டாலும்கூட (இணங்காவிட்டாலும்கூட) அந்த முயற்சிகளை நாங்கள் எடுப்பதாக தீர்மானித்துனள்ளோம். ஒரே குரலில் பேசுவதுதான் முக்கிய தேவையாகவுள்ளது. தனித்தரப்பாக பேசும்போது ஒருமித்த கோரிக்கை பலவீனப்பட்டுப்போகும்” என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இது வரவேற்புக்குரியது. தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகக் கட்சிகள் ஒன்றிணைவதிலும் பார்க்கக் கொள்கையளவில் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் ஒன்றிணைவதும் அதற்காகப் பாடுபடுவதும் ஒரே கோரிக்கையை எல்லோரும் வலியுறுத்துவதுமே மிக முக்கியமானது. ஆனால் அதற்கு முன்னதாக ஜனநாயகக் கூட்டணி கூறும் அந்த ஒரே குரல் என்ன என்பது தெளிவாகத் தீர்மானிக்கப்படவேண்டும். அதற்கான கலந்துரையாடல்கள் திறந்த மனதுடன் மேற்கொள்ளப்படவேண்டும். அரசியல் கட்சிகளை மட்டும் கொண்டதாக அல்லாமல் சமூக மட்ட அமைப்புக்களையும் அரசியல் ஆய்வு நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக அந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டு இலங்கை ஆட்சியாளர்களின் முன்பாக எழுப்பப்படவுள்ள ஒரே குரல் தீர்மானிக்கப்படவேண்டும்.

இல்லையேல், நல்லாட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் ஏக்கிய ராஜ்ஜியவுக்கும் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்கும் கூட்டமைப்பு இணங்குகிறது என்று தெரிவித்துவிட்டு, வெளியே வந்து ஈபிஆர்எல்எவ் மற்றும் புளொட் ஆகியன தமக்கு அதில் உடன்பாடில்லை என்று விமர்சித்ததைப் போன்றில்லாமல் அந்த ”ஒரே குரல்” இருக்கவேண்டும் என்றால் அது என்ன என்பதைத் தீர்மானிக்கவேண்டும். திம்புவில் நடந்த தமிழ் அரசியல் அமைப்புக்களுக்கள் இடையிலான ஓர் அடிப்படை இணக்கப்பாட்டைவிட அத்தகை ஒரே குரல் வேறு எதுவும் தமிழ்க் கட்சிகளிடம் இல்லை. எல்லாத் தமிழ்க் கட்சிகளும் தமிழ்அரசியலாளர்களும்இணைப்பாட்சியை(சமஷ்டி)தீர்வாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்என்றபோதும்அதற்குள்ளான விடயங்கள் குறித்தும் ஒற்றையாட்சியா, இணைப்பாட்சியா, இரு தேசங்களா என்பவற்றில் இதுவரையில் பொது இணக்கம் ஒன்று இந்தக் கட்சிகளிடையே இல்லை. அப்படியிருக்கும்போது இலங்கை ஆட்சியாளர்களுடன் ஒரே குரலில் பேசுவது எப்படிச் சாத்தியமாகும்?

தமிழ் மக்களின் நலனின் தமிழ்க் கட்சிகள் சுயநலன் கருதாத அக்கறை கொண்டிருக்குமானால் முதலில் தீர்வு என்ன என்பதை வரையறுத்து, அதையே வலியுறுத்துவதாகச் சபதமெடுத்துக்கொள்ளவேண்டும். பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதைப் போல தமிழ்க் கட்சிகளிடையே இதை யார் செய்வது என்கிற கேள்வி இருக்கிறது. கட்சிகள் தேர்தல் வெற்றியை நோக்கிய தன்முனைப்புடன் இருக்கும் நிலையில் இத்தகைய கொள்கை உடன்பாட்டுக்கு வரமுடியாது. அது நடக்கும்போதுதான் ஜனநாயகக் கூட்டணி சொல்லும் ஒரே குரல் சாத்தியமானது.

## தமிழ்க் கட்சிகளின் நோக்கம் இனத்தின் சமத்துவ சகவாழ்விற்காக உழைப்பதுவே



(ந.சிவசக்தி ஆனந்தன்)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க.பத்மநாபாவின் 33ஆவது நினைவு தினம் இன்று. எமது செயலாளர் நாயகமும் அவருடன் இணைந்து எமது கட்சியின் பதின்மூன்று தோழர்களும் சர்வதேச சதியின் காரணமாக சென்னையில் படுகொலை செய்யப்பட்டனர்.

தனது இறுதி மூச்சுவரை ஈழ மக்களின் விடுதலை ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு, அதனை அடைவதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியம் என்பதில் உறுதியாக நின்று, களமாடி, எம்மையும் சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்காக வழிநடத்திய தோழர் க.பத்மநாபா. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாக அன்று அவர் ஏற்றுக்கொண்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்றே இன்றுவரையில் சர்வதேச ஒப்பந்தமாகத் திகழ்கிறது. அதனூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட மாகாணசபைமுறைமையே இலங்கை அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின்கீழ் சட்ட அங்கீகாரம் பெற்ற தமிழர்களுக்கான அதிகாரமாக உள்ளது. இது போதாதென்பதைத் தெரிந்துகொண்டிருந்தஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சர்வதேச நாடொன்று எமது பிரச்சினையில் நேரடியாகத் தலையீடு செய்ய நேர்ந்ததை தமிழ் மக்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதே நேரம் இந்திய - இலங்கை ஒப்பந்தமானது ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும் என்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்துவதாகவும் அமைந்தது.

தனிநாட்டிற்கானஆயுதப்போராட்டம் 2009இல் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட நிலையில், சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் தனது கோரமுகத்தை தமிழர்கள்மீது காட்டிவருகிறது. 2009 ஆம் ஆண்டுவரை வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்றுக் கொண்டு தமிழர்களுக்கெதிரான ஒவ்வொரு வன்முறையிலும் அவர்களை அங்கு அனுப்பிவிட்டு, இப்பொழுது எமது தாயகப் பிரதேசத்திலிருந்தும் எம்மை விரட்டும் அல்லது சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் கலக்கும் முயற்சிகளை மேலாதிக்க சக்திகள் மேற்கொள்கின்றன.

நாம்இப்பொழுதுசர்வதேசசமூகத்தின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்பவர்களாக உள்ளோம். இந்த நிலையில் எமது இருப்பைத் தக்க வைக்க வேண்டுமாக இருந்தால், நாம் எமது குறுகிய கட்சிசார் அரசியல் நலன் களை முன்னிறுத்தாமல், எமது வருங்கால சந்ததி அச்சமின்றி, தமது தாயகப் பிரதேசத்தில் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எம் அனைவரதும் தலையாய கடமை. பல்வேறு காரணங்களுக்காக நாம் தனித்தனி அரசியல் கட்சிகளாக மக்கள் சேவை ஆற்றலாம். ஆனால் எமது ஒட்டுமொத்த நோக்கம் அரசியல் கட்சிகளைச் சார்ந்த நாமும் பாதிக்கப்பட்டவர்கள்தான் என்பதை உணர்ந்து, எமது இனத்தின் சமத்துவ சகவாழ்விற்காக உழைப்பதாகவே இருக்க வேண்டும்.

எமது செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா சொன்னதைப் போன்று - நாம் மக்களுக்காகவே மண்ணை நேசிப்பவர்களா இருக்க வேண்டும்.- அதனடிப்படையில் அவரின் மற்றொரு கூற்றின்படி-ஐக்கியம்என்னும்தளத்தில் நின்று இறுதி வெற்றிவரை உறுதியுடன் போராடுவோம் - என்ற முழக்கத்தை முன்வைத்து நாம் னைவரும் ஐக்கியமாக எமது இலட்சியமான தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்று எம்மினத்தை அழிவிலிருந்து காப்போம் என்பதை இன்றைய 33 ஆவது தியாகிகள் தினத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சபத மேற்கிறது.

(கட்டுரையாளர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர்)

## விடுபட்ட படகுகளின் உரிமையாளர்களுக்கும் எரிபொருளைகள் வழங்கப்படுதல் வேண்டும்

### மீனவர்கள் கோரிக்கை




சீன அரசாங்கத்தால் வடமாகாண மீனவர்களுக்கு வழங்கப்பட்ட மானிய எரிபொருள் விநியோகத்தில் விடுபட்ட படகுகளின் உரிமையாளர்களுக்கும் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடமாகாண கடற்றொழில் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம்.ஆலம் கேட்டுக்கொண்டார்.

ஊடக சந்திப்பில் பேசிய அவர், சீன அரசாங்கத்தால் வடமாகாண மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் தற்போது வட மாகாண ரீதியாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கமைவாக மன்னார், முசலி, நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

ஆனால், மீனவ சங்கங்கள் ஊடாக பதிவு செய்யப்பட்ட படகு உரிமையாளர்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் படகு ஒன்றுக்கு 75 லீற்றர் வழங்கப்பட்டு வந்தாலும் மொத்தமாக 150 லீற்றர் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மிகுதி 75 லீற்றர் எப்போது வழங்கப்படும் என்ற தகவல் இது வரை இல்லை.

தற்போது வழங்கப்பட்டமை முதல் கட்டம் என கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனினும் வழங்கப்படுகின்ற எரிபொருள் உரிய மீனவர்களுக்கு, மீனவர் படகுகளுக்கு வழங்கப்படுவதாக இல்லை.

பதிவு செய்யப்பட்ட படகுகளுக்குக் கூட சில காரணங்களை வைத்து எரிபொருள் வழங்கப்படவில்லை. உரிய அதிகாரிகள் பதிவுகளை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட சிறு தவறுகள் காரணமாகக் குறித்த பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதற்கு அப்பால் உப்புக்குளம் உள்ளடங்களாக நிறைய மீனவ சங்கங்கள் எரிபொருள் விநியோக பதிவுகளில் உள்வாங்கப்படாது முற்று முழுதாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

நிராகரிக்கப்பட்ட சங்கங்களின் படகுகளுக்கும் விடுபட்ட மீனவர்களின் படகுகளுக்கும்தொடர்ந்துளிபொருளைப் பெற்றுக்கொடுக்க கடற்றொழில் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கண்துடைப்புக்காக செய்கிறோம் எனக்கூறாது, விடுபட்டவர்களுக்கும், பதிவு செய்யப்படாத ஏனை மீனவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - எனக் கேட்டுக்கொண்டார். (05)

## அணுமின் நிலையம் குறித்து இதுவரை இறுதி முடிவை எடுக்காத இலங்கை!

இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில்மேற்கொண்டதைப்போன்று அணுமின் நிலையத்தில் முதலீடு செய்வதற்கான ரஷ்யாவின் முன்மொழிவை முன்னெடுத்து செல்வது தொடர்பாக அரசாங்கம் இதுவரை இறுதி நிலைப்பாட்டை எட்டவில்லை என மின்சக்தி எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அணுசக்தி நிறுவனமான ரோசாட்டம், இரண்டு அணு உலைகளை இயக்கி 300 மெகா வாட் ஆற்றலை உற்பத்தி செய்யும் அணுமின் நிலையத்தை உருவாக்க முன்வந்துள்ளது.

ரொசாட்டம் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடனானசந்திப்பின்போது,அணுசக்தி துறையில் முதலீடு செய்வதற்கான இந்தத்திட்டத்தைப்பரிசீலிக்கஇலங்கை ஒப்புக்கொள்வதாக, ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஜனிதா லியனகே தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள மின்சக்தி எரிசக்தி அமைச்சின்செயலாளர்மாபாபத்திரன, அணுமின் நிலையம் தொடர்பாக முடிவெடுப்பதற்கு முன்னர் பல விடயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும் என்பதால் இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனக் கூறியுள்ளார்.

குறிப்பாகப் பாதுகாப்பு அம்சங்களைக்கவனத்திற்கொள்ளவேண்டும் என்றும் அத்தோடு அணுசக்தி தொடர்பான சர்வதேச மாநாடுகளை ஆராய வேண்டும் என்பதால் அரசாங்கம் எந்த இறுதி நிலைப்பாட்டையும் எட்டவில்லை என்றும் மாபா பத்திரன குறிப்பிட்டுள்ளார். (05)

## பிக்குகளை நியமிப்பதற்கான வயதெல்லையில் மாற்றங்கள்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, மகாநாயக்க தேரர்களுடன் இணைந்து, இளம் பிள்ளைகளைப் பிக்குகளாக நியமிப்பதற்கான வயது வரம்பில் மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் ’பிக்குகளாக மாறிய பின்னர் குழந்தைகளுக்கான பெற்றோரின் கவனிப்பு மறுக்கப்படுவது அவர்களின் ஆளுமை வளர்ச்சி மற்றும் நல்வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. (05)



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கைக்கு பல கட்சிகள் எதிர்ப்பு

## ஜனக வக்கும்புர தெரிவிப்பு



எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கைக்கு அனைத்து கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு அநீதி இழைக்கும் வகையிலான பரிந்துரைகள் மற்றும் சில தொகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டும் சில தொகுதிகள் தனியாக நிர்ணயிப்பதற்கும் குறித்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் அரசி யல் கட்சிகளும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன என இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறாயினும் உள்ளூராட்சித் தேர்தலை தொகுதி முறைமைக்கு மாறாக பழைய தேர்தல் முறைமையின் அடிப்படையில் நடத்துவதற்கு பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் விருப்பம் தெரிவித்தன என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் நூற்றுக்கு 25 வீதத்தை இளைஞர் பிரதிநிதிகளுக்கு ஒடுக்குவதற்கான யோசனையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளார் எனவும் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர குறிப்பிட்டுள்ளார். (05)

## மதுபோதையில் தகராறு யாழில் இருவர் கைது

யாழ். நகரப்பகுதியில் உள்ள பழக்கடையில் மது போதையில் தகராற்றில் ஈடுபட்ட இருவரை யாழ்ப்பாணம்போக்குவரத்துபொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு அங்கிருந்தவர்களால்வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் இந்த கைது நடவடிக்கை இடம் பெற்றதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கைது செய்ய முற்பட்ட போது மதுபோதையில் இருந்த அந்த இருநபர்களும் தப்பியோட முற்பட்டதுடன், பொலிஸாருடன் தகராற்றில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைபொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

## திருமலையில் ஆலய விவரம் திரட்டு

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் வழிகாட் டுதலுடனும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடனும் தெய்வீக கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்திருகோணமலைமாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களினதும் விவரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் யதுகுல சிங்கம் அனிருத்னன் தலைமையில் சனிக்கிழமை திருகோணமலை ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய சோமாஸ்கந்நமண்டபத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களின் விபரமும் தெய்வீக கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்திரட்டப்பட்டது. மேலும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களின் நிர்வாக உறுப்பினர்கள், அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர்கள், இந்து அமைப்பினரின் நிர்வாகத்தினர்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்களுடைய நிர்வாகத்தில் இடம்பெறும் குறை நிறைகளைபற்றியும் கலந்துரையாடினர்.

இந்நிகழ்வில்பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன், மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் இலக்குமிதேவி சிறீதரன் மற்றும் பட்டினமும் சூழலும், குச்சவெளி, தம்பலகாமம், வெருகல் இந்துசமயகலாசார உத்தியோகத்தர்கள்எனப் பலரும்கலந்துகொண்டனர்.

## சேவல் சண்டையில் ஈடுபட்ட 7 பேர் வாழைச்சேனையில் கைது!

மட்டக்களப்பு வாழைச் சேனை,நாவலடிபிரதேசத்தில் சேவல்சண்டையில்ஈடுபட்டுக் கொண்டிருந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 6 சண்டைச் சேவல்கள் மற்றும்பணம்என்பனகைப் பற்றப்பட்டுள்ளன எனபொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பொலிஸாருக்குகிடைத்த தகவல் ஒன்றையடுத்து குறித்த பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப் பட்டனர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நாவலடி பிரதேசத்தைச் சேர்ந்த 26 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## திருமலையில் அதிகரித்த போதைப்பொருள் பாவனை: சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிப் போராட்டம்

திருகோணமலையில்அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனைக்கு எதிராக அக்கிராம வாசிகளால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பட்டனமும் சூழலும் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வரோதய நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோதமதுபானதயாரிப்புக்கள் அதிகரித்தமையால் இரவு நேரங்களில் அவற்றை கொள்வனவு செய்ய வருபவர்களது அச்சுருத்தல் அதிகரித்துள்ளதாகவும் குறித்த பகுதி பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராமத்தை சேர்ந்தவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் சந்தர்ப்பங்களில் பலர் போதைப்பொருள்களை உபயோகித்து விட்டு தகாத வார்த்தைகளால் அச்சுருத்துவதுடன் குறித்த பகுதி கிராமத்தை சேர்ந்த பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு பாதுகாப்பு இல்லை



என்றும் இதன்போது அவர்கள் தெரிவித்தனர்.குற்றவாளிகளை பொலிஸார் கைது செய்கின்ற போதிலும் அவர்களுக்குகுறைந்தபட்சதண்டனைவழங்கப் படுவதால் குற்றவாளிகள் தொடர்ந்தும் குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் எனவே, இவர்களுக்கு எதிதாக கடுமையானசட்டநடவடிக்கைஎடுக்கப்பட வேண்டும்என்றும்கேட்டுக்கொண்டனர். (05)

## நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்பவர் ரணிலே

### வஜிர அபேவர்தன பெருமிதம்

பொருளாதாரத்தால் சரிந்த நாட்டை மிகக் குறுகிய காலத்தில் உயர்த்திய ஜனாதிபதி ரணில் விக்ரம்சிங்கவின் தொலைநோக்குப்பார்வைபிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளை விடப் பெரியது என ஐக்கிய தேசியக் கட்சி தெரி வித்துள்ளது.



காலி மாவட்டத்தின் பத்தேகம மற்றும் அக்மீமன ஆகிய தொகுதிகளின் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அந்தக் கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வீழ்ச்சியடைந்த தேசத்தை மீளக் கட்டியெழுப்பவும், அதனை உலகநாடுகளுடன்முன்னோக்கிகொண்டுசெல்லவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் முடிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வருடத்துக்கு முன்னர் தலைமைத்துவத்தை பொறுப்பேற்று நாட்டை உலகிற்கு முன்னுதாரணமாக மீண்டும்சரியான பாதையில் கொண்டு வந்தவர் ரணில் விக்ரமசிங்கவே என்றும் வஜிர அபேவர்தன தெரி வித்துள்ளார். (05)

## சரா புவனேஸ்வரனுக்கு மணிவிழா

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் அவர்களது மணிவிழா நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.




நல்லூரில் அமைந்துள்ள சயன்ஸ் அக்கடமிகல்விநிலையவளாகத்தில்மணிவிழா ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் மருத்துவர் லயன். வை. தியாகராஜா தலைமையில் மணிவிழா இடம்பெற்றது.

விழா நாயகன் அவரது பாரியாருடன் மங்கள வாத்தியங்கள் முழங்க விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார். தொடர்ந்து ஆசியுரைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து வெற்றி தேர்வு நூல் வெளியீடு இடம் பெற்றது.

நூல் வெளியீட்டினைத் தொடர்ந்து அதிதிகளின் வாழ்த்துரைகள் இடம் பெற்றன. வாழ்த்துரை நிறைவில் பொதுச் சேவையில் ஈடுபட்டோர் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவத்தின் பின்னர் மணிவிழா ஏற்பாட்டுகுழு சார்பில் இன்றைய மணிவிழாவின் நாயகனான சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு 'பல்துறை வித்தகர்' எனும் கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. தொடர்ந்து 'பல்துறை நாயகன் சரா0புவனேஸ்வரன்' மணிவிழா மலரும் வெளியிடப்பட்டது.




இம்மணிவிழா நிகழ்வில் முன்னை நாள் கல்வி பணிப்பாளர்கள், மாகாண கல்விப்பணிப்பாளர் அரச உயர் அதிகாரிகள், மணிவிழா நாயகனின் பழைய மாணவர்கள் கல்வி நிலைய மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பெருமளவானோர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.



## ஊழலுக்கு எதிரான சட்டமூலம் ஏற்றுக்கொள்ளவே முடியாதாம்

ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஏனென்றால், திருடப்பட்ட பணத்தை மீட்கவோ, சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கவோ போதுமான சட்டங்கள் அதில் இல்லை என அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான காரணங்களால் ஊழலுக்கு எதிரான சட்டமூலத்திற்கு ஆதரவளிக்க முடியாது என அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தை எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றுவது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த சட்டமூலத்துக்கு எந்த ஒரு பிரதிநிதியும் எதிரப்பை வெளியிட மாட்டார்கள் என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## இராணுவ முகாமில் திடீர் தீ விபத்து

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி முட்கொம்பனில் உள்ள இராணுவ முகாமில் சனிக்கிழமை மாலை திடீரெனத் தீ விபத்தொன்று ஏற்பட்டது.

முட்கொம்பன் சின்னப்பல்லவராயன்கட்டில் அமைந்துள்ள இராணு முகாமில் அமைந்துள்ள கட்டட தொகுதியே தீப்பற்றி எரிந்ததை வெளியிலிருந்து மக்கள் பார்க்கக்கூடியதாக இருந்தது.

இந்த விபத்து மின்னொழுக்கு காரணமாக ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றபோதும், விபத்தில் ஏற்பட்ட சேதம் குறித்த மேலதிக தகவல்கள் எவற்றையும் பெற முடியவில்லை- (55)

## முதலுதவிப் பயிற்சி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சென்.ஜோன்அம்புலன்ஸ் சிறிலங்கா அமைப்பினால் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் முதலுதவிப் பயிற்சிப்பட்டறை மாணவர்களுக்கு நேற்று வழங்கப்பட்டன.

பாடசாலைஅதிபர்யூ.எல். நஸார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொறியியலாளர் எம்.ரீ.கமால் நிசாத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்கள் பயன்பெறும்வகையில்கருத்துக்களை வழங்கினார்.

இந்நிகழ்வில்வளவாளர்களாக சென்.ஜோன் அம்புலன்ஸ்சிறிலங்காஅமைப்பின் அம்பாறை மாவட்ட ஆணையாளரான கப்டன் எம்.ரீ.நௌஸாத் வபி மற்றும் உதவி ஆணையாளரானமேஜர்கே, எம்,தமீம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சிகளை வழங்கினர். இதன்போது ஆசிரியர் களான ஏ.எல்.எம். இர்ஸாத், எம்.எஸ்.எம். நுஸ்கி, எஸ்.ஐ. நஸீஹாபேகம்உட்பட பழைய மாணவ சங்க செயலாளர் எம்.ஐ. சர்ஜூன் ஆகியோரும்நிகழ்வில்கலந்து கொண்டனர்.

## சட்ட விரோத மரக் குற்றிகள் ஏற்றிய பார ஊர்தி சிக்கியது

### அதன் சாரதி கைது.



(செ.தி.பெருமாள்)

சட்டவிரோதமான முறை யில் மரக் குற்றிகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தியை ஹட்டன் பொலிஸார் வீதிச் சோதனையின்போது சனிக்கிழமை மடக்கிப் பிடித்தனர்.

முறையான அனுமதி பத்திரம் இன்றி 33 மர குற்றிகள் ஏற்றிச் சென்ற பார ஊர்தியே சிக்கியது. 20 மரக் குற்றிகள் ஏற்றிச் செல்வதற்கான அனுமதி பத்திரத்தை வைத்துக் கொண்டு மேலதிகமாக 33 மரக் குற்றிகள் ஏற்றிச் சென்றமை சோதனையின்போது பிடிபட்டது.

கைப்பற்றப்பட்ட வாகனமும் சாரதியும் 35 லட்சம் ரூபாய் பொலிஸ் உறுதிப் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

அனுமதி பத்திரம் இன்றி சட்ட விரோதமான முறையில் ஏற்றிச்சென்ற 33 மரக் குற்றிகள் குறித்து ஹட்டன் வன இலாகா துறையின் அறிக்கை கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்த பின்னர் சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர் மற்றும் சாரதி மீது வழக்கு பதிவு செய்ய உள்ளதாக ஹட்டன் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு அதிகாரி தெரிவித்தார்.

## மத்திய மாகாணத்தில் நாய்களுக்கு வைரஸ்!



மத்திய மாகாணத்தில் அண்மைக்காலமாக நாய்களுக்குப் பரவி வரும் அடையாளம் காணப்படாத வைரஸ் தொற்றுப் பரவல், தற்போது ஏனைய மாகாணங்களுக்கும் பரவும் அபாயம் காணப்படுவதாக கால்நடைவைத்தியர் உபுல்சாகர திலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கண்டி, நுவரெலியா, மாத்தளை கம்பளை, ஹற்றன், பேராதனை, கினிகத்தேனமற்றும்ஹற்றன்ஆகிய பிரதேசங்களிலும் இந்நோய் பரவி வருகின்றது.

இந்த மாவட்டங்களில் எட்டுமாதங்களுக்கும் குறைவான நாய் குட்டிகளுக்கு இத்தொற்று கண்டறியப்பட்டது. பாதிக்கப்பட்ட குட்டிகள் சுவாசக்கோளாறுகள் (சுவாசப் பிரச்சினைகள்), வாந்தி, வயிற்றுப்போக்கு, ஈறுகளின் நிற மாற்றம், பசியின்மை மற்றும்சோம்பல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஜெர்மன் ெப்பர்ட்ஸ் மற்றும் லாப்ரடோர் போன்ற கலப்பு இன நாய்களிடையே இத்தொற்று பரவுவது கண்டறியப்பட்டுள்ளது.

எனவேநாய்வளர்ப்பவர்கள் நாய்க்குட்டிகளுக்கு உறைந்தஉணவுகளைஊட்டுவதைத் தவிர்க்குமாறும் 4 அல்லது 5 மாதங்களுக்கு குளிப்பாட்டுவதைத்தவிர்க்குமாறும் 'வைத்தியர் சாகரதிலக்க வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# நுவரெலியா ஊடகவியலாளர்களுக்காக ஊடக மையம் அமைத்துத் தரப்படும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

நுவரெலியாமாவட்ட ஊடகவியலாளர்களின் நலன் கருதி, அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஹட்டன் பிரதேசத்தில் 'ஊடக மையம்' ஒன்று அமைத்துக் கொடுக்கப்படும் என இ.தொ.கா. பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும்தோட்டஉட்கட்டமைப்புவசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு கொட்டகலை ஹில்கூல் விருதகத்தின் சனிக்கிழமை இடம்பெற்றபோது அவர் இதனைத்தெரிவித்தார். நுவரெலியா ஊடகவியலாளர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் டக்ளஸ் நாணயக்கார தலைமையில் அமைச்சருக்கு நினைவுப் பரிசு ஒன்றும் கையளிக்கப்பட்டது. சுமார் 40 பேர் கலந்து கொண்ட இச் சந்திப்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தொடர்ந்து தெரிவித்ததாவது:

நீண்ட காலத்துக்குப் பிறகு நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சகல ஊடகவியலாளர்களையும் ஒரே நேரத்தில் சந்திப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. இது தேர்தலுக்காகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ ஏற்படுத்தப்பட்டுள்ள சந்திப்பு அல்ல. நாம் அரசியல் ரீதியில் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்கள் சரியான முறையில் மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய ஆட்சியாளர்களின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி இந்தியா செல்லும்போது நானும் அவருடன் செல்லவுள்ளேன். அப்போது மலையகத்தில் அமைக்கப் படவுள்ள இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும் மலையகம் 200 சம்பந்தமாகவும் இந்தியப்பிரதமருடன் கலந்துரையாடப்படும். விரைவில் இந்திய வீடமைப்புத் திட்டம் தொடங்கப்படவுள்ளது. அதற்கு முன்னதாக ஏற்கனவே பூர்த்தி செய்யப்படாமல் உள்ள குடியிருப்புகளை முழுமையாக்கி மக்களிடம் கையளிக்கப்படும்.

மலையகத்துக்கான நகர பல்கலைக்கழகம் ஒன்றைத்தொடங்கத் தேவையான கட்டட வசதிகள் உள்ளன. அதற்கான வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மேலும், மலையகத்தின் அபிவிருத்தி தொடர்பாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சகல தொழிற்சங்கங்களையும் அழைத்துப்பேசி கருத்துகளைபெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது, அவர்களுக்குதலா 10 - 15 பேர்ச் காணி தேவை என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளேன். ஹட்டன் பிரதேசத்தில் அவர்களுக்கான 'ஊடக மையம்' ஒன்றை அமைத்துக் கொடுக்க, பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்து கொடுத்தால், தேவையான உபகரண வசதிகளுடன் அமைத்துக் கொடுக்கப்படும்.




இலங்கை - இந்திய ஊடகவியலாளர்களின் பரிமாற்றத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி ஊடக வளர்ச்சிக்கும், நவீன தொழில்நுட்ப வசதிக்கும் நடவடிக்கை எடுக்குமாறு விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் முழுமையாக பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்படும். எனவே, ஊடகவியலாளர்கள் தமது சமூகத்தின் நலன் கருதி ஒற்றுமையாகவும்இ நேர்மையாகவும் ஊடக தர்மத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்- என்றார்.

## தொழிலாளர்கள் சட்ட சீர்திருத்தங்களுக்கு நாணய நிதியம் கோரிக்கை விடுக்கவில்லை



என்கிறார் மனுஷ

அரசாங்கத்தின் புதிதாக முன்மொழியப்பட்ட தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்கள் சர்வதேச நாணய நிதியம் அல்லது வேறு ஏதேனும் ஒரு அமைப்பால் இயற்றப்பட்டதோ அல்லது முன்மொழியப்பட்டதோ அல்ல என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மறுத்துள்ளார்.

புதிய தொழிலாளர் சட்டங்களை இயற்றுமாறு சர்வதேச நாணய நிதியமோ அல்லது வேறு எந்த சர்வதேச நிறுவனமோ இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சீர்திருத்தங்களில், பாரபட்சம் மற்றும் பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட எந்த விதமான துன்புறுத்தலையும் தடுக்க சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

சட்ட சீர்திருத்தங்களில் பகுதி நேர வேலையும் அடங்கும், அதே நேரத்தில் பெண் தொழிலாளர்களுக்கான இரவு ஷிப்ட் விதிமுறைகளும் தளர்த்தப்படும் என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (05)

## ஓய்வு பெற்ற பெண் அதிகாரிக்கு ஆபாச படம் அனுப்பியவர் கைது

ஓய்வு பெற்ற பெண் அரச நிர்வாக அதிகாரி ஒருவருக்கு வட்ஸ்அப் ஊடாக ஆபாசப் படங்களை அனுப்பிய குற்றச்சாட்டில், 48 வயதான நபர் ஒருவரை வெயங்கொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் பதுளையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும், குறித்த அதிகாரி பதவியில் இருந்தபோது அவரின் உத்தியோகபூர்வ வாகனத்தின் சாரதியாகப் பணியாற்றியவர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)




05 திங்கட்கிழமை 19.06.2023 செய்திகள்
காலைக்கதிர் Kalaikkathir

# ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தியாகிகள் தினம் இம்முறை பல இடங்களில் அனுஸ்டிப்பு






(அகீல்)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 33 ஆவது தியாகிகள் தினநிகழ்வுகள் இம்முறை வடக்கு, கிழக்கு உட்பட ஐக்கிய இராஜ்ஜியத்திலும் வெகு உணர்வு பூர்வமாக இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைக்காய் உயிரிழந்த ஈழ மக்கள் புரட்சி விடுதலை முன்னணியின் போராளிகளையும், பொது மக்களையும் நினைவேந்தும் குறித்த தியாகிகள் தின அஞ்சலி நிகழ்வுகள் ஜூன் 19 இடம்பெறுவது வழமை. இந்த ஆண்டு ஒரு வாரம் முழுவதும் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் உயர்பீட உறுப்பினர் சின்னையா (சர்மா) தெரிவித்தார்.

இதேவேளை ஜூன் 25 ஐக்கிய இராச்சியத்திலும் தியாகிகள் தின நிழக்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்த சின்னையா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கிய தலைவர்கள், மற்றும் சகோதர கட்சித் தலைவர்களும் பங்கேற்கும் வகையில் ஜூன் 25 கிழக்கில், காரைதீவில் பிரதான தியாகிகள் தின நிகழ்வு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தியாகிகள்தினநிகழ்வையொட்டிஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிரமதான மற்றும் இரத்ததான நிகழ்வுகள் ஏற்கனவே தொடங்கிஇடம்பெற்றுவருகின்றன. மேலும் மட்டக்களப்புஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னிணியின்மாவட்ட அலுவலகத்தில் ஜூன் 24, காரைதீவு, பழைய வீ.சி. வீதி, விபுலாநந்தா கலாச்சார மண்டபத்தில் (பிரதான நிகழ்வு) ஜூன் 25 என நிகழ்வுகள் சிறப்பாகவும், உணர்வு பூர்வமாகவும் இடம்பெறவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை வவுனியாவில் இன்று தியாகிகள் தின நிகழ்வுள் நடைபெறவும் ஏற்பாடாகியிருக்கின்றது.

## கிழக்கு பல்கலை பரீட்சை நிறுத்தம்; ஐக்கிய காங்கிரஸ் வரவேற்கின்றது



(ஏ.எல்.எம்.சலீம்)

கிழக்கு பல்கலைக் கழக மாணவர் தாடி வைத்திருந் தமைக்காக அவர் பரீட்சை எழுதுவதைத் தடுத்த அநீதிக்கெதிரான வழக்கில் ஜூலை மாதம் வரை பரீட்சைகள் நடத்துவதற்கு நீதி மன்றம் கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு இடைக்கால தடை விதித்துள்ளமை இன

ஐக்கியத்தை உருவாக்க நல்லதொரு முன்னெடுப்பாகும்எனஐக்கிய காங்கிரஸ்கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

இது பற்றி அவர் தெரிவித்திருப்பதாவது,

கிழக்குமாகாணத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம்களும் அந்நியோண்யமான வாழும் இன்றைய சூழலில் சில தமிழ் கல்விய லாளர்களும்அரசியல்வாதிகளும் இனவா தமாக செயல்படுவது கவலை தருவதாகும்.

ஒருமுஸ்லிம்மாணவனின் முகத்தில் உள்ள மயிர்களுக்காக அம்மாணவன் பரீட்சை எழுதுவதிலிருந்து தடுக்கப்பட்டமை மிகப் பெரிய அநியயமாகும். இது மயிரால் ஏற்பட்ட பிரச்சினை இல்லை, மாறாக அந்த மாணவன் முஸ்லிம் என்ற இனவாதத்துடன் நோக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

எத்தனையோ பல்கலைக்கழக மருத்துவ துறை மாணவர்கள் மீசை வைத்துள்ளனர்.தலைமுடி வைத்துள்ளனர். அப்படியிருக்கும்போது ஒரு மாணவன் மட்டும் அப்படித் தடுக்கப்பட்டமை அநீதி.

இந்தவிடயத்தைகுரல்கள் அமைப்பு நீதிமன்றத்துக்குகொண்டு சென்றதைத் தொடர்ந்து பரீட்சை நடத்துவதற்கு நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்தமை மூலம் மேற்படி அமைப்பின் சட்டத்தரணிகளின் முயற்சி பாராட்டுக்குரியது.


இந்த விடயத்தை சிலர் மிகச்சாதாரணமாக பார்ப்பதும் கல்விக்காக தாடியை எடுத்தால் என்னவாம் என சமூக வலையத்தளங்களில் எழுதுவதும் கண்டிக்கத்தக்கதாகும்.

அனைத்து சமூகங்களினதும் மத, கலாச்சார அடிப்படை உரிமைகளுக்கு நமது நாட்டின் அரசியல்யாப்பு அனுமதி வழங்கியுள்ளது.அவற்றை ஒவ்வொரு சமூகமும் மதிப்பதே பல்லின மக்கள் வாழும் நாட்டில் இன ஐக்கியத்தை உருவாக்கும்.

சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கெதிராக நீதி மன்றம் செல்ல வேண்டிய தமிழ் பேசும் மக்கள் இன்று சண்முகா அபாயா என்றும்கல்முனைபிரதேச செயலகம் என்றும் தாடி என்றும் தமக்குள்ளேயே முரண்பட்டு நீதி மன்றங்களுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளமை கவலைக்குரியதாகும்.

இந்த வழக்கின் மூலம்அம்மாணவனுக்கு நீதி கிடைக்கப்பெற்று தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கிடையில் இனியாவது விட்டுக் கொடுப்பும், புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம் - என்றார்.

## கிழக்கில் புதிய நியமனங்கள்



(ஏ.எல்.எம்.சலீம்)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணை யாளராக பதவி வகித்த நாகராசா மணிவண்ணனுக்குஉள்ளூராட்சி அமைச்சின் பதில் செயலாளராகவும்,பிரதி பிரதம செயலாளர்(நிர்வாகம்) பதவி வகித்த பு. மன்சூருக்குவீதிஅபிவிருத்திஅமைச்சின்பதில் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண பிரதம செயலாளரால் வழங்கப்பட்ட பரிந்துரையை ஏற்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இருவருக்கும்நியமனங்களைவழங்கியுள்ளார் என்றுஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

## கறுவா பயிர்ச்செய்கை குறித்து வவுனியாவிலும் விளக்கமளிப்பு

வவுனியாவில்கறுவாபயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கோடு செய்கையாளர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வடக்கின் ஏனைய மாவட்டங்களில் இடம்பெற்ற இந்த நிகழ்வு இறுதியாக வவுனியாவிலும் இடம்பெற்றது.

புலம்பெயர்வாழ்தமிழரான சுந்தரமூர்த்தி புவனகுமாரினால் வட பகுதியில் கறுவா செய்கையை ஊக்குவித்து அதனை பணப்பயிராக மாற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா வைரவபுளியங்குளத்தில் கறுவா செய்கையை பயிரிடுவது அதன் பலன்கள் தொடர்பில் செய்கையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் செய்கை முறைகளும் காட்டப்பட்டது.

கறுவா செய்கையை வட மாகாணத்தில் மேம்படுத்தும்செயற்பாட்டைமுன்னேடுத்துள்ள சுந்தரமூர்த்தி புவனகுமார், கறுவா ஆராச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜி. ஜி. ஜெயசிங்க மற்றும் அவரது குழுவினர் விளக்கமளித்தனர்.

(100)

## பொருளாதாரத்தை சீரழிக்கும் கருத்துக்களை வெளியிடாதீர்

### பதில் நிதி அமைச்சர் கோரிக்கை



நிலவும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த நிதி அமைச்சும் மத்திய வங்கியும் பல்வேறு உத்திகளை மேற்கொண்டு வருவதாக பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படிஎதிர்காலத்தில் வட்டி விகிதங்கள் குறையும் என்றும் சாதகமான முடிவுகளை எதிர்பார்ப்பதாகவும் பதில் நிதி அமைச்சர் ஷெஹான்சேமசிங்கமேலும்தெரிவித்துள்ளார்.

ஆகவே, அபிவிருத்தியடைந்து வரும் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச நம்பிக்கையை உடைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (05)

## கொலன்னாவ விஹாரையில் திருடிவிட்டு பொலிஸில் முறையிட்ட ஊழியர் கைது

கொலன்னாவ, ஸ்ரீ மஹா போதி விஹாரையின் வாசஸ்தலத்தில் விஹாராதிபதிக்குச் சொந்தமான ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடியதாக முறைப்பாடு செய்த ஊழியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 12 ஆம் திகதி இந்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்ததிருட்டுதொடர்பில்முறைப்பாடு செய்த ஊழியர் மீது சந்தேகமடைந்த பொலிஸார்நீண்டநேரவிசாரணைகளை முன்னெடுத்தபோது தனக்கு போதிய சம்பளம் கிடைக்காததால் தான் இவ்வாறு திருடியதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரைத் தவறாக வழிநடத்துவதற்காக ஜன்னல் கண்ணாடிகளை அகற்றியதாகவும் சந்தேக நபர் மேலும் தெரிவித்துள்ளார்.

63 வயதான சந்தேக நபர் ஹோமாகம பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## இலங்கையின் முதலாவது தாலிக்கு பொன்னுருக்கல் மணவறை திறப்பு!

கொழும்பு செட்டியார்தெருவில் அமைந்திருக்கும் பிரபல தங்க நகை மாளிகையான 'பழமுத்து முத்துக்கருப்பன் செட்டியார் ஜீவலர்ஸ்' அங்கே பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது தாலிக்குப் பொன்னுருக்கல் மணவறையைதிறந்து வைத்துள்ளது.

கொழும்பில் பொன்னுருக்கலுக்காகவே பிரமாண்டமாக அமைக்கப்பட்ட முதல் பொன்னுருக்கு மணவறை இதுவாகும். திருமணத்தில் பொன்னுருக்குதலுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு.

கொழும்பில் வீடுகளில் பொன்னுருக்குதல் செய்யப்படும் போது அதற்கான வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றன.

இதைக் கருத்திற் கொண்டே பொன்னுருக்கு மணவறையை பழமுத்துக்கருப்பன் செட்டியார் ஜீவலர்ஸ் அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது திருமணத்துக்கு முன்பாக புகைப்படம் எடுக்கும் கலாசாரம் பரவலாக காணப்படுவதால் இந்த நிகழ்வுகளையும் பொன்னுருக்குதலில்இருந்தே ஆரம்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## முட்டை 44 ரூபாவுக்கு மேல் விற்றால் சட்ட நடவழக்கை!

### வர்த்தகர்கள் மூவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம்

மன்னாரில் முட்டை மற்றும் அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாகவிற்பனை செய்த மூன்று வர்த்தகநிலைய உரிமையாளர்களுக்கு எதிராக தொடரப்பட்டவழக்கில் மூவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்து மன்னார்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மன்னார் நகர் பகுதியில் தொடர்ச்சியாகப்பொருள்கள் கட்டுப்பாட்டு விலைக்குஅதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன என மன்னார் நுகர்வோர் அபிவிருத்திஅதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுதொடர்பில் மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பின் போது குறித்த மூன்று வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீதுவழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த வழக்கு வெள்ளிக்கிழமைமன்னார்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் குறித்த வர்த்தகர்கள் மூவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டமையைத் தொடர்ந்துமன்னார் நீதிவான்நீதிமன்றநீதிபதி குறித்த மூன்று வர்த்தக நிலைய

உரிமையாளர்களுக்கு தலா ஒரு லட்சம் அபராதம் விதித்தார்.

இந்நிலையில்முட்டை44ரூபாவுக்கு அதிகமாகவும் கீரி சம்பா அரிசி 260

ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யும் பட்சத்தில் மன்னார் நுகர்வோர்

அதிகார சபையிடம் முறையிடுமாறு நுகர்வோர்பாதுகாப்புஅதிகாரசபையினர்

கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.06.2023இல் வெளியிடப்பெற்றது.